### மிசா காலத்தில் – காமராஜரைக் கைது செய்ய மறுத்தவர் கலைஞர்!

# காமராஜர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாள் - அரசு விழாவாக அறிவித்தவர் கலைஞர்!

## திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தபின் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, ஜூலை 17 –**

**பெருந்தலைவர்காமராஜருடைய பிறந்த நாள் விழாவில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பிறகு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் அளித்த பேட்டி வருமாறு :–**



"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கும் இருக்கின்ற தொடர்பைக் கூற வேண்டுமானால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு குடியாத்தம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டார். அப்போதே எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் காமராஜரை ஆதரித்து குணாளா குலக்கொழுந்தே என்று வர்ணித்து பிரச்சாரம் செய்து, அவர் ஆட்சி பீடத்தில் அமர்வதற்கு காரணமாக இருந்ததில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பங்கு உண்டு.

அதேபோல காமராஜர் அவர்கள் உயிரோடு இருக்கிற போதே அவருக்கு இன்றைய அண்ணா சாலையில் பிரம்மாண்டமாக நிற்கிற சிலையை சென்னை மாநகராட்சியின் சார்பில் முதல் முதலில் அமைத்தது திராவிட முன்னேற்றக் கழகம். பேரறிஞர் அண்ணாவுக்கு சிலை வைக்க வேண்டும் என்று திமுக நகரமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் விரும்பிய அந்த நேரத்தில் அண்ணா அவர்கள், 'எனக்கு சிலை தேவையில்லை பெருந்தலைவர் காமராஜருக்கு வையுங்கள்' என்று சொல்லி சிலை அமைத்து, அந்த சிலையை நேருவை வைத்தே திறக்க வைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு. இப்படி ஒவ்வொரு நிகழ்வி்லும் காமராஜரோடு பின்னிப் பிணைந்து திராவிட முன்னேற்ற கழகம்.

டெல்லியில் காமராஜர் வீட்டுக்குத் தீ வைத்த போது அவர் உறங்கிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அந்தவழியாகசென்றுகொண்டிருந்த அசோகா ஹோட்டல் ஊழியரான குடியாத்தத்தைச் சார்ந்த கோதண்டபாணி என்கிற திமுக தொண்டர் பாய்ந்து சென்று காமராஜரை வெளியே மீட்டு வந்தார். காமராஜர் உயிரைக் காப்பாற்றிய அந்த கோதண்டபாணியும் தி.மு.க.வைச் சார்ந்தவர் தான் இதெல்லாம் வரலாறு.

அதேபோல கொடுமையான மிசா காலத்தில் காமராஜரை கைது செய்ய வேண்டும் என்ற உத்தரவு வந்தபோது 'முடியாது' என்று மறுத்தவர் தலைவர் கலைஞர். அதோடு மட்டுமல்ல அதற்காக 'முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்கிறேன்' என்று கூறி காமராஜருடைய ஒப்புதலுக்காக சென்றபோது காமராஜர் தான், 'நீ இருந்தால்தான் நான் வெளியே இருக்க முடியும், நீயும் ராஜினாமா செய்துவிட்டால் நான் சிறைக்கு போக வேண்டும்' என்று கூறிய காரணத்தினால் ஆட்சியில் அன்றைக்கு நீடித்தார்.

அக்டோபர் 2ஆம்தேதிமறைந்தார் பெருந்தலைவர் காமராஜர். அவர் மறைந்தபோது அவருக்கு காங்கிரஸிலே இருக்கிற சில பேர் சத்தியமூர்த்தி பவனிலும், காங்கிரஸ் மைதானத்திலும் அடக்கம் செய்ய வேண்டும்என்றுசொன்னநேரத்தில், அவருக்கு அரசு மரியாதையோடு ராஜாஜி மண்டபத்தில் அவருடைய உடலை வைத்து, கொட்டுகிற மழையிலே சென்னை கிண்டி காந்தி மண்டபத்திற்கு அருகிலே இருக்கிற இந்த காட்டை சீர்படுத்தி, விளக்கு வசதிகள் இல்லாத நேரத்தில், கார் லைட்டினுடைய வெளிச்சத்தில், அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு அந்த காட்டை சீர்படுத்தி காமராஜரை நல்லடக்கம் செய்தார். அன்றைக்கு இருந்த மூத்த காங்கிரஸ்காரர்கள் எல்லாம் 'காமராஜருக்கு கொள்ளி வைக்க மகன் இல்லை என்ற குறையை கலைஞர் கருணாநிதி தீர்த்து வைத்தார்' என்று சொன்னார்கள்.

2006ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஜூலை 15ஆம் நாளை காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தார். பொதுவாக இது போன்ற அறிவிப்புகள் வந்தால் G.o மட்டும் போட்டு விடுவார்கள், அதாவது இன்னொரு ஆட்சி வந்தால் அதை கைவிட்டு விடுவார்கள். ஆனால் எந்த ஆட்சி வந்தாலும் காமராஜருடைய பிறந்த நாளை அரசு விழாவாக நடத்த வேண்டும் என்பதற்காக தனி சட்டமே போட்ட தலைவர் தான் கலைஞர்.

ஆக அப்படிப்பட்ட பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்தநாள் விழாவில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட சம்சுதீன் காலனி பகுதியில் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார்.

### மக்கள் பணத்தை மொத்தமாகச் சுருட்டும்

# த.வெ.க. அரசு, ஊழலின் மகா சக்தியாகத் திகழ்கிறது!

## முன்னாள் அமைச்சர் ரகுபதி கடும் விமர்சனம்!

*புதுக்கோட்டை, ஜூலை 17 -*

*ஊழல் மகாசக்தியாக ஊழல் பராசக்தியாக தமிழ்நாடு முதலமைச்சர் விஜயின் அரசு இருப்பதற்கு பழனியும் கரூரும் எடுத்துக்காட்டு என்று முன்னாள் அமைச்சர் ரகுபதி விமர்சித்துள்ளார்.*



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்றத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது.

திருமயம் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரகுபதி, அலுவலகத்தை திறந்துவைத்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

பழனி கோயிலுக்கு சொந்தமான இடங்கள் விற்கப்பட்டு பின்னர் உயர் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டதும், கரூரில் ஒரே நாளில் 3 ஆயிரத்து 508 ஏக்கர் நிலங்கள் பதிவு செய்யப்பட்டதும், லஞ்சம் வாங்காத உத்தமர் முதலமைச்சர் விஜய் சாரின் ஆட்சியின் ஊழலுக்கு எடுத்துக்காட்டு என்று குற்றம் சாட்டினார்.

தமிழ்நாட்டில் மொத்தமாக சுருட்டுகின்ற ஆட்சியாக த.வெ.க. அரசின் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு பழனியும் கரூரும் உதாரணம் என்றும் ரகுபதி விமர்சித்தார்.

விஜய் ஆட்சியில் எங்கு பார்த்தாலும் ஊழல் கரைபுரண்டோடுகிறது.

ஆளுங்கட்சியினரே மணல் கடத்தல் மற்றும் போதைப்பொருட்கள் விற்பனையில் ஈடுபடுகின்றனர்; அவர்கள் மீது நடவடிக்கை இல்லை.

கரூரில் முதலமைச்சர் விஜய் பேசியது ஆணவம் மற்றும் அகந்தையின் உச்சம் என்று முன்னாள் அமைச்சர் ரகுபதி குறிப்பிட்டார்.

### காவிரிப் பாசன மாவட்டங்களைப் பாதுகாப்பதற்குப் பதில்

# பாலைவனமாக்குவதில் தீவிரம் காட்டும் த.வெ.க. அரசு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் சாடல்!

*சென்னை, ஜூலை 17 -*

*மணல் குவாரிகளை திறந்தும், மேகதாது அணை கட்ட எதிர்ப்பும் தெரிவிக்காத த.வெ.க. அரசு காவிரி பாசன மாவட்டங்களை பாதுகாப்பதற்கு பதில் பாலைவனமாக மாற்றுவதில் தீவிரம் காட்டி வருகிறது என 'தினகரன்' நாளேடு சாடியுள்ளது.*

*அது வருமாறு:-*



தினகரன்

ஜூலை 16, 2026 வியாழக்கிழமை

டெல்டாவுக்கு பேராபத்து...!

தமிழகத்தில் சட்டவிரோத மணல் கடத்தல் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக அமலாக்கத்துறை நடத்திய சோதனைகளில் பல கோடி ரூபாய் ஜி.எஸ்.டி. வரி ஏய்ப்பு மற்றும் சட்டவிரோத பணப்பரிமாற்றம் கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து, கடந்த 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் மணல் குவாரிகள் மூடப்பட்டன. தற்போது அரசுக்கு வருவாய் இழப்பை ஈடுகட்டவும், தட்டுப்பாட்டை போக்கவும் கடலூர், திருச்சி, அரியலூர், விழுப்புரம், திருவள்ளூர், தஞ்சாவூர் உள்ளிட்ட 10 இடங்களில் மணல் குவாரிகளைத் திறக்க தமிழக அரசு முடிவுசெய்துள்ளது.

மணல் குவாரிகளால், சுற்றுச்சூழல் சீர்குலைவு, மணல் கொள்ளையை ஊக்குவிப்பது என

*தமிழகத்தில் சட்டவிரோத மணல் கடத்தல் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக அமலாக்கத்துறை நடத்திய சோதனைகளில் பல கோடி ரூபாய் ஜி.எஸ்.டி. வரி ஏய்ப்பு மற்றும் சட்டவிரோத பணப்பரிமாற்றம் கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து, கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் மணல் குவாரிகள் மூடப்பட்டன. தற்போது அரசுக்கு வருவாய் இழப்பை ஈடுகட்டவும், தட்டுப்பாட்டை போக்கவும் கடலூர், திருச்சி, அரியலூர், விழுப்புரம், திருவள்ளூர், தஞ்சாவூர் உள்ளிட்ட 10 இடங்களில் மணல் குவாரிகளைத் திறக்க தமிழக அரசு முடிவுசெய்துள்ளது. மணல் குவாரிகளால், சுற்றுச்சூழல் சீர்குலைவு, மணல் கொள்ளையை ஊக்குவிப்பது என இரட்டை தீமைகள் ஏற்படுவதை உணர்ந்தும், அவற்றை திறக்க தவெக அரசு வேகம் காட்டி வருவது கடும் அதிர்ச்சியளிக்கிறது. 10 முதல் 12 மணல் குவாரிகளை திறக்க அரசு தீர்மானித்திருப்பது, காவிரி பாசன மாவட்டங்களுக்கும், அதையொட்டியுள்ள பகுதிகளுக்கும் பெரும் தீமையை விளைவிக்கும்.*

*தமிழ்நாடு முழுவதும் கட்டுமான மணலுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அதை சமாளிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அளவுக்கு அதிகமாக மணல் வெட்டி எடுக்கப்படுவதை தடுக்கும் வகையில், குஜராத்தில் செயல்பட்டு வரும் ஒன்றிய அரசுக்கு சொந்தமான பாஸ்கராச்சாரியா தேசிய விண்வெளி பயன்பாடுகள் மற்றும் ஜியோ இன்பார்மாடிக்ஸ் நிறுவனம் (Bhaskaracharya National Institute for Space Applications and Geoinformatics) மூலம் செயற்கைக்கோள் வாயிலாக கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது. ஆனால், இது ஏற்புடையது அல்ல. கட்டுமான மணலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை போக்க, வெளிநாடுகளில் இருந்து மணல் இறக்குமதி செய்வது உள்ளிட்ட ஏராளமான மாற்று வழிகள் உள்ளன.*

*இதை, அரசு பின்பற்ற வேண்டும் என விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர். செயற்கைகோள் வாயிலாக கண்காணிப்பதன் மூலம் அளவுக்கு அதிகமாக மணல் அள்ளப்படுவது தடுக்கப்படும் என்பது சாத்தியமல்ல எனவும் கூறியுள்ளனர். 2023ம் ஆண்டில் 25 புதிய மணல் குவாரிகளை திறக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி அளித்தபோது, அவற்றிலிருந்து அதிகபட்சமாக 7.51 லட்சம் யூனிட்டுகள் மட்டுமே மணல் வெட்டி எடுக்கப்பட வேண்டும் என்று நிபந்தனைவிதிக்கப்பட்டது. ஆனால், 27.70 லட்சம் யூனிட் மணல் சட்டவிரோதமாக எடுக்கப்பட்டது. அதே நிலைதான் இப்போதும் தொடரும் என விவசாயிகள் அஞ்சுகின்றனர். இவ்வளவு மணல் வெட்டி எடுக்கப்பட்டால் காவிரி, கொள்ளிடம், வெள்ளாறு உள்ளிட்ட ஆறுகள் வறண்டு, ஒட்டுமொத்த காவிரி பாசன மாவட்டங்களும் பாலைவனமாகி விடும் என கவலை தெரிவித்துள்ளனர்.*

*காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணையை கட்டுவதன் மூலம் தமிழ்நாட்டுக்கு காவிரி நீர் கிடைப்பதை தடுத்து காவிரி பாசன மாவட்டங்களை பாலைவனமாக மாற்ற கர்நாடக அரசு துடிக்கிறது. இந்த சூழ்நிலையில், தமிழக அரசு, டெல்டா பகுதியில் மணல் குவாரிகளை திறந்தால், காவிரி பாசன மாவட்டங்கள் பாலைவனமாகி விடும். காவிரி பாசன மாவட்டங்களை பாதுகாப்பதற்கு பதிலாக அதை பாலைவனமாக்குவதில் தமிழக அரசு தீவிரம் காட்டுகிறது என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அஞ்சுகின்றனர். எனவே, டெல்டா பகுதியில் மணல் குவாரிகளை திறக்கும் திட்டத்தை அரசு உடனடியாக கைவிட வேண்டும் என்பதே ஒட்டுமொத்த கோரிக்கையாக உள்ளது.*

*இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது.*

### மேகதாது அணை கட்ட முயல்வதற்கும், தண்ணீர் திறக்காததற்கும் எதிர்ப்பு:

# கர்நாடகம் நோக்கி விவசாயிகள் பேரணி!

## த.வெ.க. அரசு விவசாயிகளை வஞ்சிக்கிறது!

*ஒசூர், ஜூலை 17 -*

*மேகதாது அணை கட்ட முயற்சி செய்வதற்கும், தண்ணீர் திறக்காததற்கும் எதிர்ப்பு தெரிவித்து கர்நாடகா நோக்கி பேரணி சென்ற தமிழக விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்.*



*இதேபோல், கன்னட அமைப்பினர் எல்லை அடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஒசூரில் அரசு பஸ்கள் நிறுத்தப்பட்டதால் பயணிகள் அவதிக்கு ஆளாகினர். கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமியின் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், தமிழகத்திற்கு சேர வேண்டிய தண்ணீரை, கர்நாடகா அரசு திறக்காததை கண்டித்தும், கர்நாடகா அணைகளிலிருந்து தண்ணீரை நாங்களே திறப்போம் என வலியுறுத்தியும் மாநில தலைவர் வேலுசாமி தலைமையில் போராட்டம் மற்றும் நடைபயணம் நேற்று நடைபெற்றது. பேரணியில், இளம் விவசாயிகள் சங்கம், விவசாயிகள் முன்னேற்ற கழகம் ஆகிய சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

*தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க நிறுவனர் அய்யாக்கண்ணு, பேரணியை தொடங்கி வைத்தார். ஒசூர்பெங்களூரு சாலையில் உள்ள மூக்காண்டப்பள்ளி தோப்பம்மா கோயிலிலிருந்து, கர்நாடகாவை நோக்கி கடப்பாரையுடன் பேரணியாக சென்றனர். அப்போது, இ.எஸ்.ஐ. மருத்துவமனை அருகே, நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் தடுப்பு வேலி அமைத்து, அவர்களை தடுத்து நிறுத்தினர். இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள், சர்வீஸ் சாலையில் அமர்ந்து தமிழகத்திற்கு உண்டான தண்ணீரை திறக்க வலியுறுத்தியும், மேகதாதுவில் அணை கட்ட முடிவு செய்துள்ள கர்நாடகா அரசை கண்டித்தும் கோஷமிட்டனர்.*

*இதனையடுத்து, மாநில தலைவர் வேலுசாமி, அய்யாகண்ணு உள்ளிட்ட 120க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்து, போலீஸ் வாகனத்தில் ஏற்றிச் சென்று தனியார் மண்டபத்தில் அடைத்தனர்.*

*பின்னர், அய்யாகண்ணு செய்தியாளர்களிடம் கூறியதாவது: -*

*உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, கர்நாடகா அரசு தண்ணீர் திறந்து விட்டால், தமிழகத்தின் 28 மாவட்டங்களின் குடிநீர் தட்டுப்பாடு நீங்கும். விவசாயிகளும் குறுவை, சம்பா, கோடை சாகுபடியைச் செய்ய முடியும். கர்நாடகா அரசு தண்ணீர் தராததால், டெல்டா பகுதியை வறட்சியாக்கி, அங்கிருந்து மீத்தேன், பெட்ரோல், டீசல் எடுக்க ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது. இங்கிருக்கும் தமிழக அரசோ, தண்ணீர் வராத நேரத்தில் மணல் விற்கப் பார்க்கிறது.*

*ஏற்கனவே முசிறி முதல் வாத்தலை வரை மணல் அள்ளியதால், 50 ஆயிரம் தென்னை மரங்களும், காவிரிகொள்ளிடம் கரைகளில் இருந்த லட்சக்கணக்கான பனை மரங்களும் காய்ந்து இயற்கையே அழிந்து விட்டது. மீண்டும் அத்தகைய சூழலை உருவாக்கக் கூடாது. உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத கர்நாடக அரசுக்கு எதிராக, நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடரவுள்ளோம். விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு ரூ.1 லட்சம் கோடி நஷ்டஈடு வழங்க வேண்டும். அதில் ஒரு விவசாயிக்கு ரூ.50 ஆயிரம் வழங்க வேண்டும் என மனுத் தாக்கல் செய்யவுள்ளோம்.*

*மேலும், கோதாவரி காவிரி இணைப்பின் மூலம், ஆயிரம் டிஎம்சி தண்ணீர் தருவதாகக் கூறிய வாக்குறுதியையும் ஒன்றிய அரசு நிறைவேற்றவில்லை.*

*அமெரிக்காவில் ஒப்பந்தம் செய்து, இறக்குமதி செய்யப்படும் மரபணு மாற்றப்பட்ட உணவுகளால், இளம் தலைமுறையினருக்குப் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதை கண்டித்து எங்கள் போராட்டம் டெல்லியிலும், சென்னையிலும் தொடரும்.*

*இவ்வாறு அவர் தெரிவித்தார்.*

**தமிழ்நாடு அரசு மெத்தனம்!**

*தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வேலுசாமி கூறுகையில், 'உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, கர்நாடகா தண்ணீர் தர மறுக்கிறது.*

*இதுகுறித்து தமிழக அரசிடம் முறையிட்டால், மெத்தனமாக இருக்கிறது. விவசாயிகளின் கோரிக்கையைத் தற்போதைய அரசு முற்றிலும் மறந்துவிட்டது. அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில், எல்லையைத் தாண்டிச் சென்று அணைகளின் மதகுகளை உடைத்தாவது தண்ணீரைத் திறக்க வேண்டும் என்ற நோக்கில் நாங்கள் வந்தோம்.*

*ஆனால், தமிழக அரசு தன் காவல்துறையை ஏவல்துறையாகப் பயன்படுத்தி, விவசாயிகளின் குரல்வளையை நசுக்குகிறது. விவசாயிகளை ஏளனமாக நினைக்கும் இந்த அரசு, ஓட்டுக் கேட்டு வரும் போது விவசாயிகள் அவர்களை விரட்டியடிப்பார்கள். காவிரியிலிருந்து கொள்ளை லாபத்திற்காக, மணல் அள்ளும் குவாரிகளைத் திறக்க அரசு முயன்றால், விவசாயிகள் சங்கம் அதற்கு பூட்டு போடும் மூடுவிழாவை நடத்தும் என எச்சரிக்கிறோம்' என்றார்.*

# சீரழியும் சிறைத்துறை... கண்டுகொள்ளாத அமைச்சர் நிர்மல்குமார்!

## தி.மு.க. இளைஞர் அணி குற்றச்சாட்டு!

*சென்னை,ஜூலை.17 -*

*தி.மு.க. இளைஞர் அணி ட்விட்டர் பதிவு வருமாறு:*

*நாகர்கோவில் கிளைச்சிறையில் விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டிருந்த மாற்றுத்திறனாளியான சபரிவர்மன் மரணமடைந்திருக்கிறார். நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கிளைச்சிறையில் அடைக்கப்பட்டவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என குடும்பத்தினர் குற்றம்சாட்டுகின்றனர்.*

*உடல் முழுவதும் 19 இடங்களில் காயங்கள் இருப்பதாக உடற்கூராய்வில் தெரிய வந்திருக்கிறது. மாற்றுத்திறனாளி என்றும் பாராமல், அவருக்கு பாதிப்பு இருக்கக்கூடிய வலது கையை கண்மூடித்தனமாக தாக்கி உடைத்திருக்கிறார்கள் என்று உறவினர்கள் கூறுகின்றனர். தலை முதல் கால் வரை அவருடைய உடலில் காயங்களும், ரத்தக்கட்டுக்களும் இருந்திருக்கின்றன.*

*அந்த கொடூரம் அடங்குவதற்குள், சென்னை மத்திய சிறையில் பாலாஜி என்பவர் மர்மமான முறையில் உயிரிழந்திருக்கிறார். தாம்பரம் சேலையூரைச் சேர்ந்த இவர், கைது செய்யப்பட்டபோது நல்ல ஆரோக்கியத்துடன் இருந்துள்ளார். ஆனால் திடீரென அவருடைய இறப்பு நிகழ்ந்திருக்கிறது. இன்னொரு பக்கம் சில நாட்களுக்கு முன்பு செங்கல்பட்டில் உள்ள அரசு சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் இருந்து 12 பேர் பூட்டை உடைத்துக்கொண்டு தப்பியோடி உள்ளனர். வழியில் கண்ணில் பட்ட பொதுமக்களை எல்லாம் தாக்கி, செல்போன், இருசக்கர வாகனங்களை பறித்துக் கொண்டு ஓடிவிட்டனர்.*

*ஒரே வாரத்தில் சிறைத்துறையில் இத்தனை அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன. சம்பந்தம் இல்லாத துறைகள் குறித்தெல்லாம் சம்பந்தம் இல்லாத கருத்துகளையும், அரசியல் நாகரிகம் இல்லாமல் வரைமுறையற்ற பேச்சுக்களை பேசுவதையும் வாடிக்கையாக வைத்துள்ள, சிறைத்துறைக்கு பொறுப்பு வகிக்கும் அமைச்சர் சி.டி.நிர்மல்குமார் இந்த பிரச்னைகள் குறித்தெல்லாம் இன்னும் வாயையே திறக்கவில்லை.*

*மின்வெட்டு பிரச்னையை சரிசெய்ய முடியாமல் திணறுவதைப் போலவே, சிறைத்துறை சீரழிவதையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். குற்றவாளிகளை சீர்படுத்த வேண்டிய சிறைத்துறையை எப்படி சீர்படுத்துவது குறித்து சிந்தியுங்கள் அமைச்சரே!*

*#நீதி_வேண்டும்# CustodialDeath #LockUp Death*